**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.402 நாள்: 19.08.2026

**வடகிழக்குப் பருவமழை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வடகிழக்குப் பருவமழை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்வாய்கள், வண்டல் வடிகட்டித் தொட்டிகள், ஏரிகள் மற்றும் குளங்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, இன்று (19.08.2026) தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-169க்குட்பட்ட ரெட்டிகுப்பம் கால்வாயில் தூர்வாரும் பணி, ஸ்ரீ நகர் பகுதியில் உள்ள வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் இருந்து வண்டல்கள் அகற்றும் பணி, இந்திரா நகர், 4வது சந்துப் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, சத்தியமங்கலம் பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்கப்படவுள்ள இடம், உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, மீதமுள்ள மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளிலும் தூர்வாரும் பணிகளை மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, வார்டு-174க்குட்பட்ட பகுதியில் தூய்மைப் பணியாளர்களுக்கான ஓய்வறைக் கட்டுமானப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.**